# **In the Court of the District Munsif, Eraniel**

**Original Suit No. 7/2020** **Date:21.04.2026.**

**(DW1)- சார்லஸ் பெஞ்சமின்**

வாதி தரப்பு குறுக்கு **விசாரணை**

1. எனக்கு தற்போது வயது 40 என்றால் சரிதான். நான் 1986 ல் பிறந்தேன் என்றால் சரியல்ல, 1984 ல் பிறந்தேன். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.24 ஆவணம் 1982 ல் எழுதப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அதே போல் 1982 வருடத்தில் நடந்த சம்பவங்கள் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், எனது அம்மா கூற தெரியும். நான் 3 ஆம் பிரதிவாதிக்கும் சேர்த்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். 3 ஆம் பிரதிவாதியின் கணவர் 25.01.1984 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான், 3 ஆம் பிரதிவாதி கணவர் எனது அப்பா ஆவார். எனது பிறந்த தேதி என்ன என்றால் 16.05.1984 ஆகும்.

2. எனது பிறப்பு சான்றிதழை நீதிமனற்த்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. எனது முதல் விசாரணையில் எனது வயது 40 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் என்றாலும் சரிதான். இந்த வழக்கில் நான் எனது சார்பில் எதிருரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 3 ஆம் பிரதிவாதியும் எதிருரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிருரையை தான் எங்களது தரப்பு எதிருரையாக ஏற்றுகொண்டுள்ளோம் என்றால் சரிதான், அப்போது போதுமான பண வசதி எங்களிடம் இல்லை எனவே எதிருரையை தாக்கல் செய்யவில்லை. இவ்வழக்கு வாதியால் எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எங்களுக்கு இடம் தரக் கூடாது என்பதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. நான் பிறப்பதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்பே 3 ஆம் பிரதிவாதியின் கணவர் இறந்துவிட்டார் என்றாலும் எனவே 3 ஆம் பிரதிவாதியின் கணவருக்கு தாவா சொத்தை விற்க எந்த சூழ்நிலையும் ஏற்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல, நான் பிறந்த பின்பு 5 மாதங்கள் கழித்து எனது அப்பா இறந்துவிட்டார். வாதி சொத்தை கிரயம் பெற்ற போது நான் பிறக்கவில்லை என்றாலும் எனவே அது குறித்து நான் பொய்யாக எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. 3 ஆம் பிரதிவாதியின் கணவர் அவர் சொத்தை கிரயம் பெற்ற பின் அவர் இறப்பதற்கு முன்பே வீடு கட்டி குடியேறிவிட்டார் என்றால் சரியல்ல, எங்களது குடும்ப வீட்டில் தான் இருந்தோம்.

4. நானும் 3 ஆம் பிரதிவாதி மற்றும் 3 ஆம் பிரதிவாதியின் கணவர் குடும்ப வீட்டில் சேர்ந்து வாழ்ந்தோம் என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்துபோன 3 ஆம் பிரதிவாதியின் கணவர் அவரது காலத்தில் அவரது சொத்தை பொறுத்து அவரது சகோதரரான வாதிக்கும் திருமணம் ஆகாமல் இருந்த அவரது சகோதரி மரியம்மாளுக்கும் கிரயம் ஆவணம் ஏற்படுத்தி கொடுத்துவிட்டார் என்றாலும் எனவே நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 ஆவணம் செல்லாத ஆவணம் என்றாலும் சரியல்ல. தாவா சொத்து மொத்தம் 4 செண்ட் என்றாலும் அதில் இறந்து போன 3 ஆம் பிரதிவாதியின் கணவருக்கு 1/3 பங்காக 1.333 செண்ட் மட்டுமே பாத்தியப்படும் என்றால் சரிதான்.

5. தாவா சொத்து சம்பந்தமாக ஏற்பட்ட பிரச்சனையில் வாதியின் மனைவி மற்றும் வாதியின் சகோதரி மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணைக்கு பின் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர் என்றால் அது பற்றி தெரியாது. எனது நிரூபண வாக்குமூலத்தில் மேற்படி குற்ற வழக்கு நிலுவையில் இருப்பதாக நான் பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதி மீது ஒரு குற்ற வழக்கு இருந்தது என்றால் சரிதான். 3 ஆம் பிரதிவாதி வழக்கு சொத்து அருகில் உள்ள வீட்டில் இருந்து நாகர்கோவிலுக்கு எப்போது குடியேறினார் என்றால் 2000 ஆம் வருடத்தில் சென்றார். எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் 1 ஆம் பிரதிவாதி எனக்கு சொல்லிக் கொடுத்து நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6. நான் 3 ஆம் பிரதிவாதியின் கணவர் சூசைமைக்கேலுக்கு பிறந்தவர் அல்ல என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.15 ஆவணம் எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் 1 ஆம் பிரதிவாதியின் தகப்பனார் இறப்பதற்கு முன்பு அனைத்து ஆவணங்களையும் என்னிடம் கொடுத்துவிட்டு இறந்தார். மேற்படி 1 ஆம் பிரதிவாதியின் தகப்பனார் எப்போது இறந்தார் என்றால் 2005 ஆம் வருடம் இறந்தார்.

**(ஒப்பம்)**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**